**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**

**ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்ற வளாகம், திருச்சிராப்பள்ளி**

**சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களின் சேர்க்கை அறிவிப்பு**

**(Selection of Para Legal Volunteers)**

தேதி : 2025

திருச்சிராப்பள்ளி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கி வரும் லால்குடி, மணப்பாறை, துறையூர், முசிறி, ஸ்ரீரங்கம், தொட்டியம் ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை பாமர மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக மொத்தம் 23 " சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் **(Para Legal Volunteers**) தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். மேற்படி இப்பணி சட்ட தன்னார்வர்களுக்கான கடமை மற்றும் சேவை மட்டுமே. இது நிரந்தர பணிக்கானது அல்ல, முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டும் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களுக்கு கீழ்க்கண்ட பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. MSW பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி பணியாளர்கள்
5. மருத்துவர்கள்
6. சட்டக்கல்லூரி மாணவர்கள் (வழக்கறிஞர்கள் பதிவு செய்யும் வரை)
7. சமூக சேவை செய்யும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் கட்சி சாரா தன்னார்வ தொண்டு நிறுவனத்தை சார்ந்தவர்கள்.
8. மகளீர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளீர் குழுக்கள்.
9. திருநங்கைகள்
10. அடிப்படை கல்வி தகுதி (கணினி அறிவுடன்) உடைய சேவை மனப்பாண்மை உள்ளவர்கள்

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழுவில் பணிபுரிகின்ற தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்.

மேற்கண்ட பிரிவினர்கள் சட்ட தன்னார்வ தொண்டராக பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை https://tiruchirappalli.dcourts.gov.in என்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்ற இணையதளத்திலிருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த உரிய ஆவணங்களுடன் 28.10.2025-ம் தேதி மாலை 05.00 மணிக்குள் பதிவு தபால் மூலமாகவோ (அ) நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி கடைசி தேதிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நேர்காணலுக்கு தேர்வு செய்யப்படுவர்கள், தேர்வு செய்யப்படாதவர்களின் விபரம் மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் விவரமும் https://tiruchirappalli.dcourts.gov.in என்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**குறிப்பு : மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்களாக மட்டுமே கருதப்படும். நிரந்தர பணியென கருத இயலாது. மேலும் விபரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம்.**

//ஒப்பம் //

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருச்சிராப்பள்ளி

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,,திருச்சிராப்பள்ளி

## சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக விண்ணப்பிப்பதற்கான அறிவுரைகள்

1. மேற்படி பணிக்கு மதிப்பூதியம் தவிர சம்பளம், தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி ஏதும் கிடையாது.

2. மேற்படி பணியில் இணையும் நபர்களது பணியினை தன்னார்வலர்ளாக மட்டுமே கருதப்படும் நிரந்தர பணியென கருத இயலாது.

3. மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள், விண்ணப்பங்களை **https://tiruchirappalli.dcourts.gov.in** திருச்சிராப்பள்ளி நீதிமன்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் தேதி மாலை மணிக்குள் பதிவு தபால் மூலமாக (அ) நேரிலோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. விண்ணப்பிக்க வேுண்டிய முகவரி

   தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
   மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
   மாவட்ட நீதிமன்ற வளாகம், திருச்சிராப்பள்ளி.

5. விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி மாலை மணிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றக்கொள்ளப்படமாட்டாது.

6. கீழ்க்குறிப்பிட்ட சுய சான்றொப்பமிட் ஆவணங்களின் நகல்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பிறந்த தேதி மற்றும் வயதுக்கான சான்று | பிறப்பு சான்றிதழ் S.S.L.C / H.S.C சான்றிதழ் |
| 2 | ஜாதி சான்று | தகுதி வாய்ந்த அலுவலரால் வழங்கப்பட்ட ஜாதி சான்று |
| 3 | கல்வித் தகுதி | S.S.L.C / H.S.C/ Degree/ Diploma சான்றிதழ் |
| 4 | இதர கல்விச் சான்று | ஏதேனும் இருப்பின் |
| 5 | நிரந்தர முகவரிக்கான சான்று | குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, பாஸ்போர்ட் |
| 6 | அனுபவ சான்றிதழ்கள் | ஏதேனும் இருப்பின் |

7. மேலும் விவரங்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (அ) வட்ட சட்டப்பணிகள் குழுக்களை அணுகலாம் (அ) என்ற **https://tiruchirappalli.dcourts.gov.in** திருச்சிராப்பள்ளி நீதிமன்ற இணையதளத்தையும் பின்பற்றலாம்.

//ஒப்பம் //

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருச்சிராப்பள்ளி

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருச்சிராப்பள்ளி

## சட்ட தன்னார்வ தொண்டர்களாக பணிபுரிவதற்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தந்தை / கணவர் பெயர் | : | |
| 3. | பாலினம் | : | ஆண் / பெண் / மூன்றாம் பாலினம் |
| 4 | பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 5 | கல்வித் தகுதி (சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 6 | இனம் | : | |
| 7 | மதம் | : | |
| 8 | தாய்மொழி | : | |
| 9 | சாதி(சான்றிதழை இணைக்கவும்) | : | |
| 10 | விலாசம் | : | |
| 11 | மின்னஞ்சல் முகவரி | : | |
| 12 | தொலைபேசி எண் | : | |
| 13 | சமூக சேவையில் ஏதேனும் முன் அனுபவம் உள்ளதா | : | |
| 14 | திருமண நிலை | : | |
| 15 | தாங்கள் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்தவருப்பின் அது பற்றி விவரம் தெரிவிக்கவும் | : | |
| 16 | தாங்கள் எந்தப்பகுதியில் சட்ட தன்னார்வலராக பணிபுரிய விரும்புகீறீர்கள் (டிக் செய்யவும்) | : | திருச்சிராப்பள்ளி ☐<br>லால்குடி ☐<br>மணப்பாறை ☐<br>துறையூர் ☐<br>முசிறி ☐<br>ஸ்ரீரங்கம் ☐<br>தொட்டியம் ☐ |

17. கீழ்க்கண்ட எந்த பிரிவின் கீழ் விண்ணப்பிக்கிறீர்கள் (அதற்கான சான்றிதழை இணைக்கவும்)

| வ.எண் | பிரிவுகள் | விண்ணப்பிக்கும் பிரிவு |
|---|---|---|
| 1 | ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட) | |
| 2 | ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் | |
| 3 | மூத்த குடிமக்கள் | |
| 4 | MSW பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் | |
| 5 | அங்கன்வாடி பணியாளர்கள் | |
| 6 | மருத்துவர்கள் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சட்ட மாணவர்கள் | |
| 7 | அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்க பிரமுகர்கள் | |
| 8 | மகளிர் குழுக்கள் | |
| 9 | அடிப்படை கல்வி தகுதி (கணினி அறிவுடன் உடைய சேவை மனப்பாண்மை உள்ளவர்கள்) | |

மேற்கூரிய அனைத்து தகவல்கள் உண்மை என சான்றளிக்கிறேன். உரிய சான்றிதழ்களின் நகலை இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள் :

இடம் :